# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

எண்.19–A ருக்மினி லட்சுமிபதி சாலை, ( டிட்கோ வளாகம்),
எழும்பூர், சென்னை – 600 008.
தொலைபேசி 28411376, 28411378, 28411379. தொலைநகல்: 28411377
மின்னஞ்சல்: tnercmail@gmail.com இணையதளம்: www.tnerc.gov.in

**எண்09/2008**
**16–12–2008**

## செய்திக்குறிப்பு

பொருள் :– தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், காற்றாலை மின் கட்டணவீதத்தை உயர்த்துகிறது.

2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டம், தேசிய மின் கட்டணக் கொள்கை மற்றும் தேசிய மின்சாரக் கொள்கை ஆகியவை காற்றாலை மின்சக்தி, நீர்மின்சக்தி, சூரிய மின்சக்தி மற்றும் உயிர்கூள மின்சக்தி போன்ற சுற்றுச்சூழலுக்கு அனுகூலமான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்துள்ளன.

காற்றாலை மின் உற்பத்தியில் தமிழ்நாடு தொன்றுதொட்டு தொலைநோக்கு மற்றும் முற்போக்குக் கொள்கைகளைக் கொண்டிருப்பதோடு, காற்றாலை மின்சக்தி பயன்பாட்டில் முன்னோடி மாநிலமாக இருந்து வருகிறது.

தமிழ்நாட்டில் இன்றைய தேதியில் நிறுவப்பட்ட காற்றாலை மின்சக்தியின் திறன் 4100 மெகாவாட் இது நாட்டின் மொத்த திறனில் 43 விழுக்காடாகும். தொடர்ந்து உயர்ந்து வந்த இந்த காற்றாலை மின்சக்தி வளர்ச்சியானது, மின் செலுத்தலில் உள்ள குறைபாடுகள், மின்தடை மற்றும் யூனிட் ஒன்றிற்கு ரூ.2.90 என்று மே, 2006இல் ஆணையம் நிர்ணயித்த குறைந்த மின் கட்டண வீதம் ஆகிய காரணிகளால் 2007–08இல் எதிர்மாறான விளைவை சந்தித்தது. காற்றாலை மின்சக்தியிலான முதலீடு தமிழ்நாட்டில் இருந்து இதர மாநிலங்களான குஜராத், மகாராஷ்டிரம் மற்றும் கர்நாடகத்திற்கு மெதுவாக மாறிக்கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் இந்த முதலீடுகள் குறைவதைத் தடுப்பது மிக முக்கியமானதாகும்.

அடுத்த இரண்டு அல்லது மூன்றாண்டுகளின் போது, தமிழ்நாட்டில் ஏற்படவிருக்கும் மின் உற்பத்திக்கும் மின் தேவைக்கும் உள்ள இடைவெளியைக் கருத்தில் கொண்டு இம்மாநிலத்தில் குறைந்த காலத்தில் மின்திறனை அதிக படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அனல் மின் நிலையம் உற்பத்தியைத் தொடங்க மூன்று முதல் நான்கு ஆண்டுகள் ஆகும். காற்றாலைகளை நிறுவுவதற்கு மூன்று முதல் ஆறு மாதங்களே ஆகும். இவை அனைத்தையும் நோக்குங்கால், இம்மாநிலத்தில் காற்றாலை மின்சக்தி துறையில் முதலீட்டை வரவேற்பது அவசியமாகவும் அவசரமானதாகவும் உள்ளது.

எனவே, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், காற்றாலை மின்சக்திக்கான மின்கட்டணத்தை யூனிட் ஒன்றிற்கு ரூ.2.90 என்பதிலிருந்து யூனிட் ஒன்றுக்கு ரூ.3.40 என்று உயர்த்த உத்தேசித்துள்ளது.

(ஜா. ஆனி மேரி சுவர்ணா)
உதவி செயலாளர்